RNI No: TNTAM/2023/88599

திரை மொழி

THIRAI MOZHI

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| | | | | |
|---|---|---|---|---|
| திரை: 03 | மொழி : 5 | டிசம்பர் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
| Volume : 03 | Issue : 5 | December - 2025 | Page: 8 | Price: Rs. 10 |




# 'நீங்களும் ஹீரோதான்'

## மக்கள் இயக்குநர் வி.சேகர்

நூறாண்டு காலத் தமிழ்த் திரைப்படங்களில் குடும்பப் படங்களுக்கென தனித்த மரியாதையும் அடையாளத்தையும் ஏற்படுத்திய இயக்குநர்களில் மக்கள் இயக்குநர் வி.சேகர் அவர்களுக்கு குறிப்பிடத்தகுந்த இடமுண்டு. இயக்குநர் திலகம் கே.பாக்யராஜ் அவர்களின் திரைப் பட்டறையிலிருந்து உருவானவர்தான் வி.சேகர்.

பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை வரலாறு பயின்றவர், மிக இளம் வயதிலேயே அரசுப் பணியில் சேர்ந்தார். அரசுப் பணியில் இருந்தாலும் குடும்பச் சூழலும் கலையார்வமும் அவரைத் திரைக்கலைப் பக்கம் சேர்த்தன. கே.பாக்யராஜ் அவர்களிடத்தில் 'எங்க சின்ன ராசா', 'இது நம்ம ஆளு' ஆகிய இரண்டு திரைப்படங்களில் மட்டுமே உதவி இயக்குநராகவும் இணை இயக்குநராகவும் பணியாற்றியவர் குறுகிய காலத்திலேயே இயக்குநராகப் பரிணமித்தார். இயற்கை அவருக்கு திரை உலக வாழ்க்கையை எளிமையாகவும் மிக இலகுவாகவும் தந்தது.

'நீங்களும் ஹீரோதான்' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் முதல் திரைப் படத்திலேயே தன் அழுத்தமான சிந்தனையைப் பதிவு செய்தார். திரை நாயகர்கள் மீது இளைஞர்கள் வைக்கும் நம்பிக்கை அவர்கள் வாழ்வை எவ்வாறு பாதிக்கிறது என்பதை அதில் பதிவு செய்திருப்பார். தான் பயணிக்க வேண்டிய திரைத்துறையில் நாயக பிம்பத்தை உடைத்தெரியும் வகையில் தம் தனித்த படைப்பாளுமையின் மூலம் கலகக்காரராக அவர் திகழ்ந்தார். மார்க்சிய பெரியாரியத் தத்துவங்களை கற்றுத் தெளிந்ததன் அடையாளத்தை அவரின் திரைப்படங்களில் காணலாம்.

இன்றைய சமுதாய அமைப்பில் உழைக்கும் மக்கள்தான் தலைமை மாந்தார்கள், தலைவர்கள் என்னும் பொருள்படும்படியாக 'நீங்களும் ஹீரோதான்' திரைப்படத்தினை அவர் எடுத்திருப்பார். நல்லவராக, மக்களுக்கு நன்மை செய்பவராக, எந்தத் தீங்கும் பிறருக்கு நினையாதவராக, தீய பழக்கம் இல்லாதவராக வெளிப்படும் அந்தத் தலைமை மாந்தர் படைப்பு இயக்குநரின் வார்ப்பு, அவரின் சொந்த கற்பனை. அந்த மாந்தர் படைப்பிற்கும் அதில் தலைமைப் பொறுப்பேற்று நடிப்பவருக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஏன்? அதற்கு நேர் மாறானவராகக்கூட அவர் சொந்த வாழ்வில் இருக்கலாம். அவரின் சொந்த வாழ்க்கைக்கும் கதையின் மாந்தர் படைப்பிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதை அந்தப் படத்தில் அழுத்தமாக பதிவு செய்திருப்பார். அன்றைய ஏடுகளும் முற்போக்கு சிந்தனையாளர்களும் நாட்டில் மாற்றத்தை விரும்புபவர்களும் இயக்குநரின் சரியான முயற்சி இது, இப்படியானதொரு திரைப்படம் இந்தியாவில் இதற்கும் முன்பு வந்திருக்க வாய்ப்பில்லை என அவரைப் பாராட்டினர். படம் வணிக ரீதியாக வெற்றியடையவில்லை என்றாலும் இத்தகைய பாராட்டுக்கள் அவரைப் மென்மேலும் கருத்தியல் தளத்திலிருந்தே தன் படைப்புகளை வெளியிடும் உற்சாகத்தை வழங்கின.

தான் கொண்ட கொள்கையை தத்துவ நெறியினை திரையாக்கம் செய்யும்போது இத்தகைய பொருளாதார இடர்பாடுகளை பிறருக்குக் கொடுக்க நேரிடுகிறதே என்ற அவரின் தூய எண்ணம் அவருக்கு ஒரு திரைப்பட நிறுவனத்தைத் தொடங்கக் காரணமாக அமைந்தது. 'ஜெயலட்சுமி மூவி கம்பைன்ஸ்' என்னும் திரை நிறுவனத்தின் மூலம்




> **இந்தியச் சமூக அமைப்பின் பெரும் பின்னடைவிற்கு அடிப்படைக் காரணியாக இருப்பது சாதியும் பெண்ணடிமைத்தனமுமே ஆகும். இவை இரண்டையும் எதிர்த்தே தன் படைப்பாற்றல் மூலம் சமர் செய்தார் வி. சேகர்.**

'நான் புடிச்ச மாப்பிள்ளை', 'பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கணும்' போன்ற திரைப் படங்களை எடுத்தார். சிறு முதலீட்டில் எடுக்கப்பட்ட இத்திரைப்படங்கள் வணிக அளவில் அவருக்கு வெற்றியைத் தேடித்தந்தன. இந்த நிறுவனத்தில் அவருடைய மாமா செ.கண்ணப்பன், ஆர்.கே.சேது, இன்றைய அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு போன்றவர்கள் பங்குதாரர்களாக இருந்தனர். அதன்பிறகு அவர் திருவள்ளுவர் கலைக்கூடம் என்னும் திரைப்பட நிறுவனத்தினைத் தொடங்கி அதன் மூலம் பதினைந்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கினார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் வள்ளுவரின்

> பக்கம் 2ல் தொடரும்






தத்துவ நெறியினை முன் வைத்து ‘ஒன்னாயிருக்க கத்துக்கணும்’ என்ற திரைப்படத்தினை எடுத்தார். நடிகர் சிவக்குமார், விஜுச் சக்கரவர்த்தி, மனோரமா, கோவை சரளா, கவுண்டமணி, செந்தில், சார்லி ஆகியோர் இத்திரைப்படத்தில் நடித் திருந்தனர். சாதியின் கொடுமைகளை யும் அதை அழித் தொழிப்பதற்கான வழிமுறைகளையும் அம்பேத்கர் பெரியாரியக் கொள்கைகளின்படி அவர் முன் வைத்திருப்பார். இந்த திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியானது இன்றளவிலும் அரசியல் தலைவர்கள் மேடையில் முழங்குகின்ற அளவில் பாராட்டினைப் பெற்ற காட்சியாக உள்ளது.

பட்டியலினத்தைச் சார்ந்த வெட்டியான் வேலைப் பார்க்கும் சுடலை, தம் குழந்தையைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வார். அதனைக் கண்ட பார்ப்பனர் ஒருவர் “உன் பையன் எல்லாம் பள்ளிகூடத்துல படிச்சா.... உனக்கு அடுத்து வெட்டியான் வேலை பார்க்கிறது யாரு” என்று கேட்பார், அதற்கு சுடலை,

“கொஞ்ச நாளைக்கு நீயும் உன் பிள்ளையும் பாருங்க” என்று பதில் தருவார். இந்தப் பதிலை சற்றும் எதிர்பாராத அந்தப் பார்ப்பனர் காலம் கெட்டுவிட்டதாகச் கூறிச் செல்வார். இதைப்போன்ற காட்சியைத் திரையில் காட்டுவதற்கு கொள்கை வழியிலான ஒரு துணிச்சல் வேண்டும். அந்தத் துணிச்சலை இயல்பாகவே பெற்றிருந்தார் இயக்குநர் வி.சேகர் அவர்கள். இவ்வாறு தான்இயக்கிய ஒவ்வொருதிரைப்படமும் ஒடுக்கப்படும் மனித சமூகத்திற்கு பயன்படும் வகையிலையே அவர் எடுத்தார்.

இந்தியச் சமூக அமைப்பின் பெரும் பின்னடைவிற்கு அடிப்படைக் காரணியாக இருப்பது சாதியும் பெண்ணடிமைத்தனமுமே ஆகும். இவை இரண்டையும் எதிர்த்தே தன் படைப்பாற்றல் மூலம் சமர் செய்தார் வி. சேகர். சமரசமின்றி அவர் எடுத்த ‘பொறந்த வீடா புகுந்த வீடா’ ‘வரவு எட்டணா செலவு பத்தணா’ போன்ற திரைப்படங்கள் வணிக அளவில் மாபெரும் வெற்றியை ஈட்டின. பெண்ணுரிமையை வலியுறுத்தும் நகைச்சுவைத் ததும்ப எடுக்கப்பட்ட அவரின் திரைப்படங்கள் பெண்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றன.

**திரைக்கலைஞனாக ஒரு சராசரியான இயக்குநராக மட்டும் தன் வாழ்வைத் தொடராமல் இயக்கவாதியாவும் சங்க வாதியாகவும் இருந்து பிற கலைஞர்களுக்கு எடுத்துக்காட்டாகவே தன் வாழ்வை அமைத்துள்ளார்.**

அன்றைக்குத் திரையுலகில் வெற்றியின் முகப்பில் இருந்த உச்ச நடிகர்கள் அவரின் திரைப்படங்களை நடிக்க முன் வந்தால் கூட அதையெல்லாம் அவர் எளிதாகப் புறந்தள்ளி எளிமையாகவே தன் திரைப்பயணத்தை தொடர்ந்தார்.

‘மனிதாலயம்’ என்னும் தன் சொந்த நிறுவனத்தின் மூலம் ‘நான் பெத்த மகனே’ என்னும் திரைப்படத்தை எடுத்தார். வணிக ரீதியாக அந்தத் திரைப்படம் வெற்றிடையடையாதக் காரணத்தால் மீண்டும் திருவள்ளுவர் கலைக்கூடத்தின் மூலமாகவே அவர் திரைப்படங்களை எடுத்தார். ‘காலம் மாறிப்போச்சு’, ‘விரலுக்கேத்த வீக்கம்’ போன்ற திரைப்படங்கள் அவரின் இயக்கத்தில் மாபெரும் வெற்றியை ஈட்டியத் திரைப்படங்களாக உள்ளன.

குடும்பப் பாங்கான தொலைக் காட்சித் தொடர்கள் வெற்றியடைந்த காலத்தில் இவரின் குடும்பப் படங்கள் மாபெரும் வெற்றியை ஈட்டுவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. திரையுலகில் இவரின் பாதையை புகழ்மிக்க சில இயக்குநர்கள் பின்பற்றி வெற்றியும் பெற்றனர்.

இவர் இயக்குநராக மட்டுமல்லாமல் தீவிர சங்கவாதியாகவும் இருந்துள்ளார். 1997இல் திரை கலைஞர்களுக்காக தமிழ்நாடு திரைப் படப் படைப்பாளிகள் தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்னும் புதிய அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தார். இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்கள் தலைவராகவும் புரட்சி இயக்குநர் ஆர். கே. செல்வமணி அவர்கள் செயலாளராகவும் இருந்த அந்த கூட்டமைப்பின் பொருளாளராக திறம்பட செயலாற்றினார்,

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் பொருளாளராக நீண்ட காலம் இருந்தார். இயக்குநர்கள் உதவி இயக்குநர்களுக்கென பெரிய அளவில் சங்க அலுவலகம் உருவாகவும் காரணமாக இருந்தார். படம் தயாரிப் பது, இயக்குவது, பொருளீட்டுவது என வழமையான திரையுலகப் பாதையில் மட்டும் பயணிக்காமல் ஈழத்தமிழர் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினை, திருட்டு விசிடி எனத் தமிழ்நாட்டின் தமிழர்களின் உயிராதாரப் பிரச்சினைகளுக்கெல்லாம் குரல் கொடுக்கக் காரணமாக இருந்தார்.

திரைக்கலைஞனாக ஒரு சராசரியான இயக்குநராக மட்டும் தன் வாழ்வைத் தொடராமல் இயக்க வாதியாவும் சங்க வாதியாகவும் இருந்து பிற கலைஞர்களுக்கு எடுத்துக் காட்டாகவே தன் வாழ்வை அமைத் துள்ளார். தன் நிறுவனத்தில் பணியாற்றும் அனைவரையும் தன் குடும்பத்தின் உறுப்பினராகவே கருதி அவர்கள் சுக துக்கங்கள் அனைத்திலும் பங்கெடுத்து அவர்களுக்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

இதய நோயின் காரணமாக பதினைந்து நாட்களுக்கு மேலாக மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தவர் 28.11.2025 வெள்ளிக்கிழமை அன்று மாலை இயற்கை எய்தினார். இயக்குநர்கள் சங்கத்திலும் அவரின் இல்லமான வி.சேகர் குடிலிலும் ஏராளமானத் திரையுலகினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் அருகில் நெய்வாநத்தம் என்னும் அவரின் சொந்த கிராமத்தில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**முனைவர் இரா.முருகன்**
**இணை இயக்குநர்**






## ரௌத்திரம் பழகு

எத்துணை வேகம்
உமக்குள் உண்டு
அதனைக் கொண்டே
ஆளுதல் நன்று

அலையின் தாக்கம்
கரையைச் சிதைக்கும்
அலையா மனதே
அழிவை எதிர்க்கும்

சாயும் சிரமும்
நேரே நிமிரும்
பாயும் வேங்கை
வேகம் கொண்டால்

வினையைப் பிடித்து
பிழையைத் திருத்து
விடையும் தெரியும்
வினாவும் புரியும்

தீயின் நாவாய்
திமிர்ந்து எழுந்தே
தீவினை அழித்து
நல்வினை நாட்டு


கோவின் பொறுமை
உம்மிடம் வேண்டும்
கோவாய் நீயும்
வென்றிட வேண்டும்

கோவை செவ்விதழ்
கோவத்தில் மலரா
கோதை மனதின்
பக்குவம் வேண்டும்

ஆழியின் நடுவில்
அமைதியும் நிலவும்
அதிர்வும் கொண்டிட
அரக்கராய் மாறும்

வேண்டிய இடத்தில்
ரௌத்திரம் பழகு
வேடிக்கை பார்த்திடும்
மனதினை விலக்கு

மடலாய் நாற்திசை
பறந்து விரிந்திடு
கடலென கயமையை
தகர்த்து எரிந்திடு..



**கவிஞர் ஜெ. பார்வதி**
கணித பட்டதாரி ஆசிரியை
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கீழ்முட்டுக்கூர், கீ.வ.குப்பம் ஒன்றியம்
வேலூர் மாவட்டம்.

# பாலிவுட்டை கலக்கிய முதல் கோலிவுட் ஹீரோ - ரஞ்சன்



1916 இல் கீசக வதம் என்ற தமிழ் சினிமாவின் முதல் மௌன படத்தில் ஆரம்பித்து 1931இல் வெளிவந்த முதல் பேசும் படமான காளிதாஸ் தொடங்கி இன்று வரை ஏராளமான நட்சத்திரங்களை கண்டது தமிழ் திரையுலகம். அன்று முதல் கதாநாயகன்கள் மற்றும் வில்லன் என்ற இரட்டை குழல் துப்பாக்கியில் பயணம் செய்யும் தமிழ் சினிமா கண்டது ஏராளமான நட்சத்திரங்களை. அதில் இவர் பெரியவர் அவர் பெரியவர் என்ற முதிர்ச்சியில்லாத வாதங்களும் ஒருவகையில் தமிழ் சினிமாவின் தொடர்ச்சிக்கு பங்காற்றிக் கொண்டுதான் இருக்கிறது. இதுபோன்று சினிமா அரசியல்களை தாண்டி திறமை என்னும் படகில்லாமல் யாராலும் சினிமா கடலைக் கடக்க முடியாது என்பதே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. ஆம். திறமை இந்த ஒற்றை வார்த்தையை ஒவ்வொரு கலைஞனும் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. அந்த வகையில் இந்திய சினிமாவின் வரலாற்றில் தன் திறமைகளினால் தமிழக மட்டுமல்லாது இந்திய திரையுலகிலும் தன் சுவடை பதித்தவர் தான் ரஞ்சன். பெரும்பாலும் அந்த காலத்தில் கலை உலகில் அடி எடுத்து வைத்த பெரும்பாலானவர் களின் பள்ளி கல்லூரி படிப்பு என்பது சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இருக்காது ஆனால் அதற்கு விதிவிலக்கு ரஞ்சன். தான் தொட்ட அத்தனை துறைகளிலும் தனது முத்திரையை பதித்தவர். நாட்டியக் கலைஞர், இசைக் கலைஞர், பத்திரிகையாளர், எழுத்தாளர் எனப் பல துறைகளிலும் புகழ் பெற்றவர்.

தமிழ் சினிமாவில் அறிமுகமாகி குறிப்பிட்ட படங்களுக்கு பின் இந்தி திரை உலகில் ஏராளமான படங்களில் நடித்து ஹீரோவாகவும் வில்லனாகவும் சிறப்பு தோற்றத்திலும் கலக்கியவர். தன் எழுத்து, இசை, நடன, பாடல் ஞானங்களில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியவர் ரஞ்சன். 1918 இல் மார்ச் இரண்டாம் தேதி சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். இவரது தாயார் அலமேலு திருச்சி ஸ்ரீரங்கத்தையும் தந்தையார் ராமநாராயண சர்மா லால்குடியையும் சார்ந்தவர்கள். வேங்கட நாராயண சர்மா என்ற இயற்பெயர் கொண்ட இவரை அனைவரும் ரமணி என்று செல்லமாக அழைப்பர். தந்தை ராமநாராயண சர்மாவிற்கு இருந்த இசை நடன கலைஞர்களின் நட்பு ரஞ்சனின் கலை ஆர்வத்திற்கு பெருந்தீனி போட்டது. நாராயணசாமி என்பவரிடம் முறையாக நடனமும், நாமக்கல் சேஷய்யரிடம் கர்நாடக சங்கீதமும் முறையாக பயின்றார். சிறுவயதிலேயே கல்வி கேள்விகள் சிறந்து விளங்கிய ரஞ்சன் படிப்பு கலை என இரண்டிலும் முழுமையாக தேர்ச்சி பெற்றிருந்தார். மெட்ராஸ் யூனிவர்சிட்டி படிக்கும் காலம் தொட்டு மேடை நாடகங்களில் நடிப்பு நடனம் பாடல் என்று தன் திறமைகளை வெளிக்காட்டினார். கல்லூரி காலங்களில் மேடை நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த ரஞ்சனை ஜெமினி ஸ்டுடியோவை சேர்ந்த வேம்பத்தூர் கிருஷ்ணன் என்பவர் கவனிக்க ரஞ்சனை தமிழ் திரையுலகின் ஆச்சாரியார் என்று கொண்டாடப்பட்ட டிஜி ராகவாச்சாரியிடம் அறிமுகம் செய்து வைத்தார். ஆயினும் 1941 முருகன் டாக்கீஸ் தயாரித்த ராஜா சந்திரசேகர் இயக்கத்தில் எம்கே தியாகராஜ பாகவதர் கதாநாயகனாக நடித்த அசோக் குமார் திரைப்படத்தில் இளம் புத்தர் வேடத்தில் அறிமுகமானார் ரஞ்சன். தெலுங்கில் இருந்து தமிழுக்கு

**தலையில் தொப்பியும், கௌபாய் ஆடையும் அணிந்து ரஞ்சன் குதிரையில் ‘சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா’ என்று பாடி திரையில் தோன்றியபோது, எம்ஜிஆரின் ரசிகர்களுக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமாக படம் அமைந்தது.**

வந்த கண்ணாம்பா மற்றும் நாகையா ஆகியோருக்கும் இதுவே முதல் படமாகும். நன்கு தமிழ் உச்சரிக்கும் ரஞ்சனின் முதல் படத்தில் அவருக்கு வசனமே இல்லை. பார்வை தெரியாத தியாகராஜ பாகவதருக்கு பார்வை கொடுக்கும் புத்தர் கதாபாத்திரம். பின் அதே ஆண்டில் வெளியான ரிஷ்ய சிருங்கர் என்ற படத்தில் கதாநாயகனாக அறிமுகமானார். இந்த திரைப்படத்தின் ஒளிப்பதிவாளர் நியூடோன் ஸ்டூடியோவின் ஜித்தன் பானர்ஜி வேங்கடரமணாவிற்கு, ரஞ்சன் என்று பெயரிட்டார். இந்த படத்தில் பாலா ரிஷி சிங்கராக வீணை S. பாலச்சந்தர் நடித்தார். ரஞ்சனுக்கு ஜோடியாக பழம்பெரும் நடிகை வைஜெயந்திமாலாவின் தாயார் வசந்தரா தேவி நடித்திருந்தார். உலக விடயம் எதுவும் தெரியாமல் காட்டில் வசித்து வந்த ரிஷ்யசிருங்கராக ரஞ்சனும் அவரை மயக்கி நாட்டுக்கு அழைத்துப் போக வந்த மாயாவாக வசுந்தராதேவியும் நடித்தனர். பின் அதே ஆண்டில் வெளியான ஜெமினியின் நந்தனார் திரைப்படத்தில் சிவபெருமானாக சிவதாண்டவம் ஆடியது ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்த படத்தின் டைட்டில் கார்டில் சிவதாண்டவம் ரஞ்சன் எம். லிட் போடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதை எடுத்து 1942 ல் பக்த நாதர் என்ற படத்தில் நடித்தார். 1943 இல் வெளியான மங்கம்மா சபதம் ரஞ்சனின் ஆரம்பகால திரைப்படங்களில் குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்ற படமாய் அமைந்தது. அப்பா மகன் என இரட்டை வேடங்களில் இந்த படத்தில் நடித்தார். இந்தத் திரைப்படத்தில் இவர் பாடிய வண்ணப் புறாவே நீ யார்? உன்னை வளர்க்கும் அச்சீமாட்டி ஊரென்ன, பேரென்ன? என்ற புறாவை வைத்து மங்கம்மாவை நினைத்துப் பாடும் பாடலும் சாலிவாகனனில், எவ்விதம் தவப்பயன் அடைந்தாள், எண்ணி ஏங்குவதே என்னுள்ளம் எனும் பாடலும் ரஞ்சனின் இசை, குரல் நயத்துக்கு எடுத்துக்காட்டு.

1945 இல் வெளியான சாலிவாகனன் என்ற படத்தில் நடித்தார். இந்த படத்தினை பற்றி பேசும் போதே எம்ஜிஆர் மற்றும் ரஞ்சனுக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் பேசப்படும். இந்த திரைப்படத்தில் ரஞ்சன் கதாநாயகனாகவும் எம்ஜிஆர் வில்லனாகவும் நடித்தார்கள். கடுமையான வாள்சண்டைக் காட்சியில் ரஞ்சனின் கைதேர்ந்த வாள்சுழற்சிகளில் அதிர்ந்துபோன எம்ஜிஆர் இயக்குநர் பி.என். ராவ்விடம் சென்று ரஞ்சன் நிஜமாகவே வாளால் தன்னைத் தாக்க வருகிறார் என்று புகார் தெரிவித்தார் என்று திரைப்பட வரலாற்று ஆசிரியர் ராண்டார் கை சொல்கிறார். பிற்காலத்தில் வாள் வீச்சில் சிறந்தவர் எம்ஜிஆரா? ரஞ்சனா? என்று வாதிடும் அளவிற்கு இவர்களது சண்டைக்காட்சி வெகுவாக மக்களை ஈர்த்தது. எம்ஜிஆருக்கும் ரஞ்சனுக்கும் ஏற்பட்ட இந்த கருத்து வேறுபாட்டினை தீர்த்து வைத்ததில் முக்கிய பங்கு அக்காலத்தில் இருவருக்கும் பொதுவான நண்பராக இருந்த சின்னப்பா தேவர்.

பின் 1948 இல் தமிழ் திரையுலகை இந்திய திரையுலகமே திரும்பிப் பார்க்க வைத்த ஜெமினி எஸ் எஸ் வாசலின் சந்திரலேகா திரைப்படம் ஏப்ரல் ஒன்பதாம் தேதி வெளியானது. இந்த திரைப்படம் ரஞ்சனை புகழின் உச்சி கொண்டு சென்றது என்றால் மிகை ஆகாது. ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பேர் பார்த்த திரைப்படம் என்று அந்தக் கால பத்திரிகைகள் சந்திரலேகா வை பற்றி எழுதின. தமிழ் இந்தி என்று இரு மொழிகளிலும் வெளியிடப்பட்ட இந்த திரைப்படம் இந்தியாவிலேயே அதிக வசூல் செய்த படம் என்று சொல்லும் அளவிற்கு பிரம்மாண்டமான திரைப்படமாக ரசிகர்களால் கொண்டாடப்பட்டது. சந்திரலேகா




> பக்கம் 8ல் தொடரும்

# கோவா திரைப்பட விழா – 2025: வேவ்ஸ் பிலிம் பசார்




**நடிகர் ரஜினிகாந்துக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது - கோவா திரைப்பட விழா -**

கோவா சர்வதேச திரைப்பட விழா (IFFI) இந்தியாவின் மிக முக்கியமான சர்வதேச திரைப்பட நிகழ்வாக திகழ்கிறது. உலகின் பல நாடுகளிலிருந்து வரும் திரைப்படங் களையும், படைப்பாளிகளையும் ஒரே மேடையில் இணைக்கும் இந்த விழா, கலை, கலாசாரம் மற்றும் சிந்தனையின் பரிமாற்றத்திற்கு ஒரு வலுவான தளமாக செயல்படுகிறது. இவ்வாண்டு நவம்பர் 20 தொடங்கி 28 ஆம் தேதி வரை நடைபெற்ற கோவா திரைப்பட விழா, வெறும் திரைப்படக் காட்சிகளுக்கான நிகழ்வாக அல்லாமல், புதிய படைப்பாளிகளுக் கான வாய்ப்புகள், அறிவுப் பகிர்வு, தொழில்முறை தொடர்புகள் மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றை வழங்கும் ஒரு முழுமையான படைப்புச் சூழலாக திகழ்ந்தது.

### கோவா திரைப்பட விழா – 2025 : சிறப்பம்சங்கள்

- உலகின் பல நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான திரைப்படங்கள்
- புதிய மற்றும் சுயாதீன படைப்பாளிகளுக்கான சர்வதேச மேடை
- IFFI Film Bazaar மூலம் தயாரிப்பு, விநியோகம், முதலீட்டு வாய்ப்புகள்
- உலகப் புகழ்பெற்ற இயக்குநர்கள் நடத்தும் Masterclass & Workshop நிகழ்வுகள்
- இளம் படைப்பாளிகளுக்கான De but / First Film பிரிவுகள்
- கலை, சமூக, அரசியல் கருப்பொருள்களை மையமாகக் கொண்ட திரைப்படங்களுக்கு முக்கியத்துவம்
- OTT, புதிய தொழில்நுட்பங்கள், AI பயன்பாடு குறித்து விவாத மேடைகள்
- தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விருதுகள்
- உலகளாவிய திரைப்பட வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புகள் (Network ing ) வாய்ப்பு
- இந்திய சினிமாவை உலகிற்கு அறிமுகப்படுத்தும் முக்கிய தளம்

### உலக சினிமாவின் சந்தை பிலிம் பசார் (WAVES Film Bazaar)

திரைப்பட விழாவோடு இணைந்து நவம்பர் 20 முதல் 24 வரை பிலிம் பசார் எனும் சினிமா சந்தை திரைப்பட விழா வளாகத்தில் இருந்து 1 மைல் தொலைவில் அமைந்துள்ள மாரியாட் ஹோட்டலில் நடைபெறும். இது கான் திரைப்பட விழாவுக்கு நிகரான ஒரு பெரும் சினிமா சந்தையாக திகழ்கிறது. கடந்த ஆண்டுவரை என் எப் டி சி பிலிம் பசார் என்று அழைக்கப் பட்டது. எனினும் திரைப்படத் துறையை சர்வதேச தொழிலாக கருதி வேவ்ஸ் என்றும் தனிப்பிரிவை உருவாக்கி (World Audio Visuals Entertain ment Summit) அதன் கீழ் ஒருங்கிணைது செயல்படும் வகையில் இந்திய பொழுதுபோக்கு துறையை உருவாக்கி வருகிறது இந்திய அரசு. எனவே இவ்வாண்டு முதல் அது வேவ்ஸ் பிலிம் பசார் என்ற பெயரில் நடைபெற தொடங்கியுள்ளது. இதன் சிறப்பம்சம் PITCHING market. அதாவது உங்களிடம் ஒரு கதை இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதற்கு ஒரு தயாரிப்பாளர் வேண்டுமெனில் இந்த பிட்சிங் நிகழ்வில் 5 நிமிடத்தில் உங்கள் கதையை சொல்லவேண்டும். அதற்கான காட்சிகள் உங்களிடம்



இருந்துஆலும் சுருக்கமாக திரையிட்டு காட்டலாம். விருப்பம் கொண்ட தயாரிப்பாளர் அந்த அரங்கில் இருந்தால் அவர் உங்களுடன் தொடர்பு கொள்வார். இவ்வாறு படைப்பாளியை யும் முதலீட்டாளரை யும் இணைக்கும் நிகழ்வு இது. ஆச்சர்யப்படத்தக்க வகையில் பாலிவுட்டின் பிரபல இயக்குனரும், பாலிவுட் நடிகர் ஆமீர்கான் மனைவியுமான கிரண்ராவ் ஒரு கதையுடன் வந்திருந்தார். “ மேடம் நீங்கள் நினைத்தால் ஒரு தயாரிப்பாளர் உங்களை தேடி வருவார். உங்களின் சமீபத்திய லாபட்டா லேடீஸ் ( Laapata Ladies) ஆஸ்கர் பரிந்துரையில் இருக்கிறது. நீங்களும் புதியவர்கள் போல் போட்டியில் நிற்கிறீர்களே என்று கிண்டலடித்தேன். கிரண் ராவ் சிரித்துகொண்டே சொன்ன விடயம் மிக முக்கியமானது. “ எப்பொழுதும் ஒரே தயாரிப்பாளரின் முதலீடு என்பது திரைப்பட துறையில் கொஞ்சம் ரிஸ்கானது. Collaborative Investment சினிமாவுக்கு பாதுகாப்பானது. அதே உங்கள் படத்தில் வெவ்வேறு நாடுகளில் இருந்து முதலீடுகள் இருக்கும் போது பரந்துவிரிந்த சந்தைஅ மற்றும் வினியோகம் உருவாகும். எனவே தான் இந்த பிட்சிங் நிகழ்வு எனக்கும் முக்கியமானது. அடுத்து நான் எனது ஒவ்வொரு படைப்பையும் ஒரு புதிய இயக்குனர் என்ற நோக்கிலேயே அணுகிறேன் என்றார்.

இந்த பசார், இளம் இயக்குநர்கள், சுயாதீன தயாரிப்பாளர்கள் மற்றும் ஆவணப்படக் கலைஞர்களுக்கு சர்வதேச கூட்டுத் தயாரிப்பு வாய்ப்புகளை உருவாக்குகிறது. Pitch ing Sessions, CoProduction Meetings, Oneto One Market Interactions போன்ற நிகழ்வுகள் மூலம் ஒரு கதை திரைப்படமாக மாறும் பயணம் இங்கிருந்து தொடங்குகிறது.

இதுபோன்று வணிகத்தையும் கலையையும் சமநிலையில் இணைக்கும் இந்த வேவ்ஸ் பிலிம் பசார், இந்திய படைப்பாளிகளின் கனவுகளை உலக சந்தையுடன் இணைக்கும் ஒரு முக்கிய பாலமாக செயல்படுகிறது.

ஒரு கதை உருவாக்க நிலையில் உள்ள திரைக்கதை முதல் தயாரிப்பு, பிந்தைய தயாரிப்பு (PostProduction) மற்றும் விநியோகம் வரை அனைத்து கட்டங்களிலும் உள்ள திட்டங்கள் இங்கு உலகளாவிய தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் முதலீட்டாளர்களிடம் முன்வைக்கப் படுகின்றன. தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு பெவிலியனில் பல சர்வதேச இயக்குனர்கள் ஆர்வமுடன் வந்து சென்றனர். இதன் மூலம் தமிழ்நாடு உலக திரைப்பட தயாரிப் பாளர்களின் ஈர்ப்பாக இருப்பதை உணர முடிந்தது.

### செயற்கை நுண்ணறிவு சார்ந்த கருத்தரங்கம் மற்றும் விவாத மேடை

கோவா திரைப்பட விழா – 2025 இன் முக்கிய அம்சமாக, செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த கருத்தரங்கம் மற்றும் விவாத மேடை அமைந்தது. இந்த நிகழ்வு, திரைப்படத் துறையில் AI ஏற்படுத்தும் மாற்றங்கள், வாய்ப்புகள் மற்றும் சவால்களை விரிவாக அலசியது. திரைக்கதை எழுதுதல், ஸ்டோரிபோர்டு வடிவமைப்பு, விஷுவல் எஃபெக்ட்ஸ், எடிட்டிங், சவுண்ட் டிசைன், மார்க்கெட்டிங் மற்றும் OTT விநியோகம் வரை AI பயன்பாடுகள் குறித்து நிபுணர்கள் விவாதித்தனர்.

மேலும், AI கருவிகள் படைப்பாளிகளின் படைப்பு சுதந்திரத்தை எவ்வாறு விரிவாக்குகின்றன, அதே நேரத்தில் நெறிமுறை, காப்புரிமை மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான கேள்விகள் என்ன என்பதையும் இந்த விவாத மேடை முன்வைத்தது. இளம் மற்றும் அனுபவமிக்க படைப்பாளிகளுக்கிடையே உரையாடலை உருவாக்கி, தொழில்நுட்பமும் கலைஞரின் பார்வையும் சமநிலையில் இணையும் எதிர்கால சினிமாவை சிந்திக்க வைக்கும் ஒரு முக்கிய தளமாக படைப்புத்துறையில் செயற்கை நுண்ணறிவு குறித்த கருத்தரங்கள் அமைந்தன.

### ஆதிசக்தியின் நடிப்பு பயிற்சி பட்டறை – கோவா திரைப்பட விழா 2025

கோவா திரைப்பட விழா 2025 இன் முக்கியமான மற்றும் கவனம் பெற்ற நிகழ்வுகளில் ஒன்றாக, ஆதிசக்தி நிகழ்த்திய நடிப்பு பயிற்சி பட்டறை. தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டம் ஆரோவில்லை மையமாகக் கொண்டு இயங்கும் ஆதிசக்தி நாடகப்பள்ளி, உலக நாடக அரங்கில் தனித்த அடையாளம் பெற்றது. இப்பள்ளியின் பயிற்சி பட்டறை கோவா திரைப்பட விழாவில், கலா அகதெமி வளாகத்தில் நடைபெற்றது. நடிப்புத்துறை நுணுக்கங்கள் பற்றி ஆதிசக்தியின் இயக்குனர் திரு. வினய்குமார் வகுப்பெடுத்தார்.

இந்த பயிற்சி பட்டறை, திரை மற்றும் மேடை நடிகர்களுக்கான அடிப்படை உடல் பயிற்சி, மூச்சுப் பயிற்சி, கவன ஒருமுகப்படுத்தல், இடவெளி உணர்வு, ரிதம் (Rhythm) மற்றும் உடல் வெளிப்பாடு ஆகியவற்றில் ஆழமான பயிற்சிகளை வழங்கியது. வசன மைய நடிப்பைத் தாண்டி, உடல், மனம், உணர்வு ஆகிய மூன்றும் ஒன்றாக இணையும் நடிப்பு முறையை ஆதிசக்தி பயிற்றுவிக்கிறது.

இந்த பட்டறையின் முக்கிய சிறப்பு, தொழில்முறை நடிகர்கள் மட்டுமல்லாமல், இளம் படைப்பாளிகள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள் மற்றும் திரைப்பட மாணவர்களுக்கும் இது பயனளிப்பதாக அமைந்தது. நடிகரின் உடலை ஒரு கருவியாக புரிந்து கொள்ளச் செய்யும் இந்த பயிற்சி, கதாபாத்திர உருவாக்கத்தில் ஆழத்தையும் உண்மையையும் எடுத்துரைத்தது.

சர்வதேச திரைப்பட விழா சூழலில், இந்திய பாரம்பரிய நாடகப் பயிற்சியை உலக மேடைக்கு அறிமுகப்படுத்தும் இந்த ஆதிசக்தி நடிப்பு பயிற்சி பட்டறை, கோவா திரைப்பட விழா 2025 இல் கலைஞர்களுக்கான ஒரு அரிய அனுபவமாகவும், சினிமா–நாடகம் இணையும் ஒரு முக்கிய தருணமாகவும் அமைந்தது.

### கவனம் பெற்ற திரைப்படங்கள் & விருது பெற்றவர்கள்

- சிறந்த முழுநீள திரைப்படம் (Best Feature Film): Skin of Youth (வியட்நாம்)



- சிறந்த இயக்குநர் (சில்வர் பீகாக்): Gondhal திரைப்படத்திற்காக சந்தோஷ் தவகார்
- சிறந்த நடிகர் (ஆண்): A Poet திரைப்படத்திற்காக உபெய்மார் ரியோஸ்
- சிறந்த நடிகை (பெண்): Little Trouble Girls திரைப்படத்திற்காக ஜாரா சோஃபிஜா ஒஸ்டான்
- சிறந்த முதல் திரைப்படம் (Best Debut Feature): My Daughter's Hair & Fränk (இணை வெற்றியாளர்கள்)
- சிறந்த இந்திய முதல் திரைப்பட இயக்குநர்: Kesari Chapter கவனம் பெற்ற திரைப்படங்கள் & விருது பெற்றவர்கள்
- சிறந்த முழுநீள திரைப்படம் (Best Feature Film): Skin of Youth (வியட்நாம்)
- சிறந்த இயக்குநர் (Silver Peacock Award): Gondhal திரைப்படத்திற் காக சந்தோஷ் தவகார்
- சிறந்த நடிகர் (ஆண்): A Poet திரைப்படத்திற்காக உபெய்மார் ரியோஸ்
- சிறந்த நடிகை (பெண்): Little Trouble Girls திரைப்படத்திற்காக ஜாரா சோஃபிஜா ஒஸ்டான்
- சிறந்த முதல் திரைப்படம் (Best Debut Feature): My Daughter's Hair & Fränk (இணை வெற்றியாளர்கள்)
- சிறந்த இந்திய முதல் திரைப்பட இயக்குநர்: Kesari Chapter 2 திரைப்படத்திற்காக கரண் சிங் தியாகி
- சிறந்த வெப் தொடர் (OTT): Bandish Bandits – Season 2

### ரஜினிகாந்திற்கு மரியாதை – கோவா திரைப்பட விழா 2025

கோவா சர்வதேச திரைப்பட விழா 2025 இல், இந்திய சினிமாவின் மகத்தான கலைஞர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கு வழங்கப் பட்ட சிறப்பு மரியாதை, விழாவின் முக்கிய தருணங்களில் ஒன்றாக அமைந்தது. ஐந்து தசாப்தங்களைக் கடந்த அவரது திரைப்பயணம், ஒரு நடிகரின் வெற்றிக் கதையைத் தாண்டி, மக்கள் மனங்களில் ஊடுருவிய ஒரு பண்பாட்டு நிகழ்வாகவே பார்க்கப் படுகிறது.

பஸ் கண்டக்டராக இருந்து, இந்தியாவின் மிகப் பெரிய நட்சத்திரமாக உயர்ந்த ரஜினிகாந்தின் வாழ்க்கைப் பயணம், கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு ஊக்கமாக விளங்குகிறது. அவரது தனித்துவமான நடிப்பு பாணி, உடல் மொழி, வசன உச்சரிப்பு மட்டுமல்லாமல், எளிமை, பணிவு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகிய பண்புகளும் அவரை ஒரு மக்கள் கலைஞராக உயர்த்தியுள்ளது.

இந்த மரியாதை நிகழ்வில், ரஜினிகாந்த் நடித்த முக்கியமான திரைப்படங்கள், இந்திய சினிமாவில் ஏற்படுத்திய தாக்கம், குறிப்பாக தென்னிந்திய சினிமாவை தேசிய மற்றும் சர்வதேச அளவில் அறிமுகப் படுத்திய விதம் ஆகியவை நினைவு கூரப்பட்டன. வணிக சினிமாவிலும், கருத்துச்சினிமாவிலும் சமநிலையுடன் பயணித்த ஒரு அபூர்வ நடிகர் என்ற அடையாளம் அவருக்கு வழங்கப் பட்டது.

கோவா திரைப்பட விழா போன்ற சர்வதேச மேடையில் ரஜினிகாந்திற்கு அளிக்கப்பட்ட இந்த மரியாதை, ஒரு தனிநபருக்கான பாராட்டாக மட்டுமல்லாமல், தமிழ் சினிமாவின் உலகளாவிய தாக்கத்திற்கு வழங்கப் பட்ட அங்கீகாரமாகவும் கருதப் படுகிறது. இது எதிர்கால படைப்பாளிகளுக்கும் நடிகர்களுக்கும் “கலை, உழைப்பு, பணிவு” என்ற மூன்று அடிப்படைகளின் முக்கியத்து வத்தை வலியுறுத்தும் ஒரு வரலாற்றுத் தருணமாக அமைந்தது.

### கோவா திரைப்பட விழாவில் 'அமரன்' திரைப்படம்

இந்த திரைப்பட விழாவின் சிறப்பம்சம் . ரஜினிகாந்த் மற்றும் கமலஹாசன் இருவரும் இடம் பெற்றது. ரஜினிக்கு 50 ஆண்டுகால திரைவாழ்க்கைக்கான பாராட்டு விழா என்றால், கமலஹாசன் தான் தயாரித்த அமரன் படத்திற்காக வந்திருந்தார். கோவா சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI) 'அமரன்' திரைப்படம் கவனம் பெற்ற முக்கியமான தமிழ் படைப்புகளில் ஒன்றாக இடம்பிடித்தது. மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் உண்மை வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்ட இந்த படம், வழக்கமான போர் திரைப்பட வடிவத்தைத் தாண்டி, ஒரு மனிதனின் கனவு, குடும்பம், காதல் மற்றும் தியாகம் ஆகியவற்றை உணர்வுபூர்வ மாக முன்வைத்ததற்காக பாராட்டப் பட்டது.

சிவகார்த்திகேயனின் நடிப்பும், சாய் பல்லவியின் இயல்பான வெளிப்பாடும் சர்வதேச பார்வையாளர்களிடையே கவனம் ஈர்த்தன. குறிப்பாக, தேசபக்தியை பிரச்சாரமாக அல்லாமல் மனிதநேயமாக காட்சிப் படுத்திய விதம், விமர்சகர்களால் குறிப்பிடப்பட்டது. கோவா திரைப்பட விழா போன்ற சர்வதேச மேடையில் 'அமரன்' திரையிடப் பட்டமை, தமிழ் சினிமா உண்மை சம்பவங்களை உலக தரத்தில் கலைநயத்துடன் சொல்லும் திறன் கொண்டது என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது. இது தேசபக்தி சினிமாவுக்கு ஒரு புதிய மொழியை வழங்கிய படமாகவும் கருதப் படுகிறது.

### கோவா திரைப்பட விழாவில் ஏன் கலந்துகொள்ள வேண்டும்?

கோவா சர்வதேச திரைப்பட விழா (IFFI) என்பது ஒரு திரையிடல் விழா மட்டுமல்ல; அது படைப் பாளிகளின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு பள்ளி, சந்தை மற்றும் சந்திப்பு மேடை . உலகின் சிறந்த திரைப்படங்களை பெரிய திரையில், இயக்குநர்களுடன் உரையாடும் வாய்ப்புடன் காண முடியும். இது தமிழ் சினிமாவின் வழக்கமான வடிவத்திலிருந்து வெளியே வந்து புதிய கதை சொல்லல் மொழியை கற்றுக்கொள்ள உதவும். உங்கள் குறும்படம், ஆவணப்படம் அல்லது முழுநீள படம் தேர்வாகினால், அது சர்வதேச விநியோகம், திரைப்பட விழா பயணம், OTT வாய்ப்புகளுக்கு வழி திறக்கும். திரைக்கதை, தயாரிப்பு நிலையில் உள்ள திட்டங்களை Pitch செய்யுங்கள். ஒரு நல்ல கதை, சரியான மேடையில் சொன்னால், தயாரிப்பாளர்கள் தேடி வருவார்கள்.

இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், எடிட்டர்கள், ஒளிப்பதிவாளர்கள், விமர்சகர்கள் – எல்லோருடனும் பேசுங்கள். ஒரு சிறிய உரையாடல் கூட ஒரு திரைப்படமாக மாறலாம். ஆதிசக்தி போன்ற நடிப்பு பயிற்சிகள், சர்வதேச இயக்குநர்களின் வகுப்புகள் – இவை சிறந்த அனுபவங்கள் தரும்

கோவா திரைப்பட விழாவிற்கு போவது செலவு அல்ல; அது ஒரு முதலீடு. ஒவ்வொரு படைப்பாளியும் தங்கள் சொந்த மண்ணின் கதைகளை உலக மொழியில் சொல்ல கற்றுக்கொள்ள உகந்த இடம் கோவா திரைப்படவிழா. உங்கள் திறமையை குறைத்து மதிப்பிடாதீர்கள் — உலக சினிமா உங்களுக்காக காத்திருக்கிறது.

**-ராஜ்மோகன் சுப்ரமண்யன்**




# டைரக்டர்ஸ் கிளப் சார்பில் ஆல்பம் பாடல் திரையிடல் விழா

தமிழ்த் திரையுலகத்தின் பல்துறை வல்லுநர்கள் பங்கேற்பில், திரு. சக்தி தலைமையில் இயங்கி வரும் டைரக்டர்ஸ் கிளப் (*Directors Club*) சார்பில், "*Value 5*" என்ற தலைப்பில் மாபெரும் ஆல்பம் பாடல் திரையிடல் விழா, சென்னை சாலிகிராமத்தில் உள்ள பரணி ஸ்டூடியோவில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த விழாவின் நோக்கம், புதிய படைப்பாளர்களின் இசை, நடிப்பு மற்றும் தொழில்நுட்ப திறமைகளை ஒருங்கிணைத்து, ஐந்து நிமிடங்களுக்குள் காட்சிப்படுத்தி அவர்களை மதிப்பீடு செய்வதாகும். இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பாடகர்கள், நடன அமைப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், ஒலி வடிவமைப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோர் நேரடியாகப் பார்த்து தேர்வு செய்து, விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவின் முக்கிய சிறப்பம்சமாக, தனி ஆல்பம் பாடல்களை திரையரங்கில் திரையிடுவது இந்தியாவிலேயே முதன்முறையாக நடைபெற்றது.



என் நிலத்தில், பட்டர்பிளை மற்றும் பாரத மாதா ஆகிய ஆல்பம் பாடல்களை இயக்கிய வி.கார்த்திக்குமார் சிறந்த இயக்குனருக்கான விருதை வென்றார்

ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் வசூலிப்பதற்கு முன், திரையிடலுக்குத் தேர்வு செய்யப்பட்ட பாடல்களையே பதிவு செய்தனர். தேர்வு செய்யப்பட்ட அனைத்து தனி ஆல்பம் பாடல்களும் திரையரங்கில் முழுமையாக திரையிடப்பட்டன.

மொத்தமாக 75க்கும் மேற்பட்ட ஆல்பம் பாடல்கள் பெறப்பட்ட நிலையில், யாரையும் குறிப்பிட்டு அவமதிப்பதோ, சாதி, மதம் சார்ந்த கருத்துகளோ, பெண் தூற்றல் அல்லது இழிவுபடுத்தும் வார்த்தைகளோ இல்லாத 37 ஆல்பம் பாடல்கள் தேர்வு செய்யப்பட்டு திரையிடப்பட்டன.

விழாவில் இசையமைப்பாளர்கள் S. S. குமரன், அருண்ராஜ், ஒலி வடிவமைப்பாளர் டி. உதயகுமார், நடன மாஸ்டர் விஜி சதீஷ், பாடலாசிரியர்கள் முருகன் மந்திரம், K. R. தரன், ஒளிப்பதிவாளர் நிரன் சந்தர், இயக்குநர் ஹாரூன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தயாரிப்பாளர்கள் வி. மதியழகன், சிவா, பாடகர் வி.வி. பிரசன்னா மற்றும் முதன்மை விருந்தினர்களாக இசையமைப்பாளர்கள் A. R. ரெஹானா, C. சத்யா ஆகியோர் விழாவில் பங்கேற்று நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

மாலை மூன்று மணிக்கு தொடங்கிய விழாவில், நடுவர்கள் முன்னிலையில் 37 ஆல்பம் பாடல்கள் திரையிடப்பட்டன. கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், சிறந்த பாடல், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடகர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த நடிகர், சிறந்த நடனம், சிறந்த நடன வடிவமைப்பாளர், சிறந்த ஒலி வடிவமைப்பாளர், சிறந்த எடிட்டர், சிறந்த பாடல்வரிகளுக்கான வீடியோ மற்றும் சிறந்த திரையிடலுக்கான தியேட்டர் என மொத்தம் 12 சிறப்பு விருதுகள் மற்றும் சிறந்த ஆல்பங்கள் என முதல் மூன்று இடங்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. இந்த விழா, புதிய படைப்பாளர்களுக்கு தளமளித்து, பல திறமையாளர்களை பொதுத்தளத்தில் அறிமுகப்படுத்தும் முயற்சியாக அமைந்தது என டைரக்டர்ஸ் கிளப் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**-தங்கமித்ரன், நிருபர்**












# ஹாலிவுட் கதையமைப்பில் ‘நளவெண்பா’



உள்ளபடியே பள்ளியில் கொடுத்த வீட்டுப் பாடங்களை முடித்த கையோடு, அப்பாவின் கைப்பேசியை வாங்கி நண்பர்கள் குழாமிற்கு கதை நேரத்தை நினைவூட்ட, அடுத்த அரை மணி நேரத்தில் வேறு வேறு அவென்யூக்களிலிருந்து, பட்டாம்பூச்சி போல சைக்கிளில் கிளம்பிய ஏழெட்டு சிறுவர், சிறுமியர் தாத்தா வீட்டின் மொட்டை மாடியில் பிரசன்னமாகி யிருந்தார்கள்.

சிறுவர்களைப் போலவே மொட்டை மாடிக்கு பின்னே, சற்று தூரத்தில் தெரிந்த அசோக் பில்லரும், வானத்தில் தெரிந்த நிலவும் தாத்தாவுக் காக காத்துக் கொண்டிருந்தன. PET மாஸ்டர் சரவணன் வந்ததும், வேறு வேறு பள்ளியில் படிக்கும் நண்பர்களை அவருக்கு உற்சாகமாக அறிமுகப்படுத்தி வைத்தான் சின்சான்.

கதை நேரம் முடிந்ததும் அனை வருக்கும் வழக்கமாக கொடுக்கும் சுண்டலை சமையலறையில் மணக்க மணக்கத் தயார் செய்து கொண்டிருந்தாள் பாட்டி.

வழக்கமான உற்சாகத்துடன் படியேறி, வகுப்பறையில் நுழைவது போல மொட்டை மாடிக்கு வந்து அனைவரையும் வரவேற்றார் தாத்தா.

சிறுவர்களின் ஆரவாரம் அடுத்தடுத்து உள்ள வீடுகளின் மொட்டை மாடியில் எதிரொலிக்க, அங்கிருந்தபடியே சிலர் குடும்பத்தோடு அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

அனைவரது கண்களிலும் உற்சாகம் மிளிர கதை சொல்ல ஆரம்பித்தார் தாத்தா.

இப்ப நான் சொல்ல போற கதை எந்த சூழ்நிலையில? யாருக்காக? யாரு சொன்னா? அப்படிங்கற விஷயத்தை கடைசியா பேசுவோம். அதுக்கு முன்னாடி கதை என்னன்னு சொல்லிடுறேன்..

ஏதோ சீரியஸா கதை சொல்ல போறேன்னு நினைச்சுக்காதீங்க...

ரிலாக்ஸா கேளுங்க...

இது ஒரு ராஜா ராணியைப் பத்தின கதைதான்...

நிஷத நாடுன்னு ஒரு நாட்டை நளன் அப்படிங்கற ஒரு மகாராஜா ஆட்சி செஞ்சிகிட்டு இருந்தான். நல்ல வீரன், கொடைவள்ளல், பேரழகன். நேர்மை தவறாமல ஆட்சி நடத்துற ராஜா... அதனால நாட்டு மக்கள் எல்லாம் ரொம்ப ஹாப்பியா இருந்தாங்க...

அந்த நிஷத நாட்டுக்குப் பக்கத்துல விதர்ப்ப நாடுன்னு ஒரு நாடு இருந்துச்சு. பீம மகராஜா தான் அந்த நாட்டோட மன்னர். அவருக்கு ஒரு பேரழகான பொண்ணு. அந்த இளவரசி பேரு தமயந்தி. அந்த இளவரசியைப் பத்தி தெரியாத புலவர்களோ, பக்கத்து நாட்டு மன்னர்களோ யாரும் கிடையாது. சோசியல் மீடியா இல்லாத அந்த காலத்திலேயே அந்த இளவரசி அவ்வளவு பேமஸ்...

இவங்க ரெண்டு பேரும் நான் கதையில முக்கியமான கேரக்டர்ஸ். ok வா...

புரிஞ்சுதா?

"ம்......"

என்ற எல்லாரும் கோரஸாக சொல்ல...

"ஓகே! குட், குட்!"

என்று தாத்தா கதையை தொடர்ந்தார்.

இந்த நள மகராஜா ஒரு நாள் அரண்மனைக்கு பக்கத்துல இருக்குற சோலையிலே... அதாவது ஒரு பெரிய Parkல ... ... வண்டலூர் ஜூ மாதிரி வச்சுக்கங்களேன்... ஒரு வாக் போயிட்டு இருந்தாரு..

பாக்குறதுக்கு ரொம்ப அட்ராக்ட்டிவா, தண்ணில நடந்து போயிட்டு இருக்கிற ஒரு அன்னப்பறவையை பார்த்ததும், அங்கே இருக்கிற பணிப்பெண்களை கூப்பிட்டு அந்தப் பறவையைப் போய் புடிச்சுட்டு வர சொன்னாரு...

அவங்ககிட்ட பிடிபட்ட அன்னம் ராஜாகிட்ட வந்ததும் பயந்து,

"என்னை எதுவும் பண்ணிட வேணாம் ... என்னை ஏதும் பண்ணிட வேணாம் ராஜா..." ன்னு சொன்னதாம். வாத்து பேசுவதை போல நடித்துக் காண்பித்தார் தாத்தா.

குறுக்கிட்ட சின்சான், "அன்னப்பறவை பேசுமா தாத்தா" ?

சிரித்துக் கொண்டே தாத்தா, "இதே கேள்விய தான் நளனும் அந்த பறவை கிட்ட கேட்டான்..."

எல்லோரும் வியப்பாக பார்க்க,

"வழக்கமா பேண்டஸி கதை, புராணக் கதைகள்ல வர பறவை தானே... அதனால அது பேசும்", என்றார்.

ஒரு சிறிய சிரிப்பலை ... அருகில் இருக்கும் மொட்டை மாடியில் இருந்தும் எதிரொலித்தது.

அந்த அன்னப்பறவை ராஜா கிட்ட, "மகாராஜா.. மகாராஜா... உங்க அழகுக்கு பொருத்தமா தமயந்தின்னு ஒரு இளவரசி பக்கத்து நாட்டுல இருக்கா... அவகிட்ட உங்கள பத்தி சொல்லவான்னு", கேட்க,

ராஜா அதுக்கு "சரி போய் சொல்லு", ன்னு சொல்ல,

அன்னப்பறவை அங்க இருந்து நேரா பறந்து போய், தமயந்தி கிட்ட போய் சேர்ந்துச்சு... இளவரசியைப் பார்த்துச்சு...

"இளவரசியாரே! உங்களுக்கு ஒரு செய்தி வச்சிருக்கேன்...

பக்கத்துல நாட்டில் இருக்கிறாரே நள மகராஜா .... அவரு ரொம்ப நல்லவரு.... வல்லவரு, பேரழகன்... உங்கள அவருக்கு ரொம்ப பிடிக்கும் " னு சொல்ல...

அன்னப்பறவை சொன்னதை கேட்ட இளவரசி, ஏற்கனவே நள மகராஜாவை பற்றி கேள்விப்பட்டி ருந்ததால, நேர்ல பாக்காமலேயே தான் கல்யாணம் பண்ணிக்கிட்டா அப்படிப்பட்ட ஒரு நீதி தவறாத, வீரமான, அழகான ஆள தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு முடிவு பண்ணியிருந்தா...

இப்ப அன்னம் வேற வந்து சொல்லவும் double confirm பண்ணிக்கிட்டா மனசுல....

அந்த அன்னப்பறவை கிட்ட,

"எனக்கும் அந்த ராஜாவ ரொம்ப பிடிக்கும்னு போய் சொல்லு", ன்னு மறுபடியும் அன்னப்பறவையை ராஜா கிட்ட தூது அனுப்பிச்சிட்டா "..

ஒரு pause விட்டு வாட்டர் பாட்டிலில் இருந்து தாத்தா தண்ணீர் குடிக்க,

"பாக்காமலேயே லவ் பண்றது படத்தில் வந்த கதை மாதிரி இருக்கே சார்!"

என சரவணன் கேட்க,

"நிச்சயமா இந்த கதை கூட அந்த படத்துக்கு இன்ஸ்பிரேஷனா இருந்திருக்கலாம்... இந்த கதையை நிறையப் பேர் படிச்சிருப்பாங்களே " ...

என்ற தாத்தா கதையைத் தொடர்ந்தார்.

ஆங்....இப்ப என்ன ஆச்சுன்னா ... நள மகாராஜாவுக்கு, தமயந்திய ரொம்ப புடிச்சி போச்சு.... அதே மாதிரி தமயந்திக்கும், ராஜாவை ரொம்ப புடிச்சி போச்சு...

ஒரு வழியா விஷயத்தை கேள்விப் பட்ட பீம மகராஜா தன்னுடைய பொண்ணுக்கு அதாவது இளவரசிக்கு சுயம்வரத்துக்கு ஏற்பாடு பண்ணினார்.

"சுயம்வரம்னா என்ன தாத்தா"? என்று ஒரு குட்டி பையன் தலையை சொரிந்து கொண்டே கேட்டான்.

"ஆங்...அப்படி கேள்றா என் செல்லக்குட்டி..

இப்பல்லாம் நீங்க எக்ஸிபிஷன் போயி ஒவ்வொரு கடையா பார்த்து .... பார்த்து ... பிடிச்ச பொருளை வாங்குறீங்க இல்ல...

அந்த மாதிரி.... அந்த காலத்துல ராஜா ராணி கல்யாணம் எப்படி நடக்கும்ன்னா...

கல்யாணம் பண்ணிக்க போற இளவரசி இருக்கிற நாட்டுல சுயம்வரம்ன்னு ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு பண்ணுவாங்க... அந்த நிகழ்ச்சியில கலந்துக்க எல்லா நாட்டு இளவரசர்களுக்கும், ராஜாக்களுக்கு தகவல் கொடுப்பாங்க.

தொடரும்....

தகூஷினமூர்த்தி
எழுத்தாளர்



# பாலிவுட்டை கலக்கிய... மூன்றாம் பக்க தொடர்ச்சி




வின் பிரபலத்தால் ரஞ்சனம் ராஜகுமாரியும் இந்தி திரையுலகில் அடி எடுத்து வைத்தனர். குறிப்பாக ரஞ்சன் மற்றும் ராதாவின் பால் சந்தை அந்த காலத்தில் பெரிதாய் பேசப்பட்டது. 1949 இல் இந்தியில் நிஷான் என்ற படத்தில் நடிக்க தொடங்கிய ரஞ்சன் பின் 1951இல் மங்களா 1952ல் சிந்துபாத் த செய்லர், பின் சின்ஷிணாகி பூபால பூ என வரிசையாக பல இந்தி திரைப்படங் களில் நடிக்க தொடங்கினார். இதன் காரணமாக குடும்பத்தோடு மும்பையில் குடியேறி போட்டி நடிகர்களுக்கெல்லாம் ஒருவித நிம்மதியை கொடுத்தார் ரஞ்சன். 1954 இல் மின்னல் வீரன் என்ற படத்தின் மூலம் மீண்டும் தமிழில் நடிக்க தொடங்கினார், மேலும் என் மகள் படத்தில் நடித்தார், ஆனால் இந்த திரைப்படங்கள் எதிர்பார்த்து வெற்றியைப் பெறவில்லை பின் மீண்டும் இந்தியில் பாப் பேட்டி, போன்ற திரைப்படங்களில் நடித்தார்.

1957 இல் தமிழ் திரையுலகின் புகழின் உச்சாணிக் கொம்பில் சூப்பர் ஸ்டாராக இருந்தார் எம்.ஜி.ஆர். தனது சொந்தத் தயாரிப்பான ‘நாடோடி மன்னன்’ படத்தில் அவர் நடித்துக் கொண்டிருந்தபோது பத்துக்கும் அதிகமான படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தார். இந்த நேரத்தில் எம்.ஜி.ஆரை மட்டுமே வைத்துப் படங்களைத் தயாரித்துவந்த சாண்டோ சின்னப்பா தேவர், அவருக்கென்றே உருவாக்கிய ‘ராபின் ஹூட்’ டைப் கதைதான் ‘நீலமலைத் திருடன்’. எம்.ஜி.ஆரின் நட்சத்திர அந்தஸ்துக்கு ஏற்ப திரைக்கதை, சென்டிமென்ட் காட்சிகள், பாடல் காட்சிகள், ஆக்ஷன் காட்சிகள் ஆகியவற்றை அமைத்து சூப்பர் ஹிட் மசாலா படம் எடுப்பதில் தேவர் கெட்டிக்காரர். அவ்வண்ணம் எம்.ஜி.ஆருக்காகப் பார்த்துப் பார்த்து உருவாக்கிய நீலமலைத் திருடன் படத்தின் கதையை, தனது சகோதரரும் இயக்குநருமான எம்.ஏ. திருமுகத்தை அழைத்துச்சென்று எம்.ஜி.ஆரிடம் சொல்ல வைத்தார்.

கதையைக் கேட்டு ‘சபாஷ்’ என்று பாராட்டினாரே தவிர கால்ஷீட் தராமல் இழுத்தடித்துவந்தார். தேவர் அதற்கு முன் எம்.ஜி.ஆரை வைத்துத் தயாரித்த ‘தாய்க்குப் பின் தாரம்’ படத்தில் ஏற்பட்ட மனஸ்தாபத்தை எம்.ஜி.ஆர். மறக்கவில்லை. தேவரோ தெய்வ பக்தியும் பொறுமையும் கொண்டவர். அப்படிப்பட்டவர் இனி எம்.ஜி.ஆருக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு வந்தார். இந்தக் கதைக்கு எம்.ஜி.ஆரை விட்டால் வேறு யார் சரியாகப் பொருந்துவார் என்று யோசிக்க ஆரம்பித்தார். அப்போது தேவரின் எண்ணத்தில் சட்டென்று வந்து அமர்ந்துகொண்டார் நடிகர் ரஞ்சன்.

இந்நிலையில் இந்திப் படவுலகில் பிஸியான சாகஸ நடிகராகப் புகழ்பெற்றிருந்தார் ரஞ்சன். சில ஆண்டுகள் மதராஸ் பக்கமே தலைவைத்துப் படுக்காமல் பம்பாயில் தங்கிவிட்டார். அவரை மீண்டும் இங்கே அழைத்து வந்தார் தேவர். தேவருக்கு எம்.ஜி.ஆரைப் போலவே ரஞ்சனும் ஆரம்ப கால நண்பர்.

சாலிவாகனன் படத்தில் எம்.ஜி.ஆருக்குச் சவாலாக அமைந்த ரஞ்சன்தான் இந்தக் கதையில் நடிக்க முடியும் என்று தேவர் நம்பினார்.

தலையில் தொப்பியும், கௌபாய் ஆடையும் அணிந்து ரஞ்சன் குதிரையில் ‘சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா’ என்று பாடி திரையில் தோன்றியபோது, எம்ஜிஆரின் ரசிகர்களுக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமாக படம் அமைந்தது. “என்ன இது? எங்கள் தலைவருக்கான பாத்திரம் அல்லவா இது? பாட்டும் அவருக்கானதுதானே,” என்றெல்லாம் ரசிகர்கள் புலம்பியது எம்ஜிஆர் காதுவரைக்கும் சென்றது. தன்தவறைப் புரிந்துகொண்ட எம்ஜிஆர் சுதாகரித்துக் கொண்டார்; தனது நண்பர் தேவரிடம் சமாதானம் ஆனார்; மீண்டும் நட்பு வலுப்பெற தேவர் எம்ஜிஆர் கூட்டணியில் ‘த’ வரிசைப் படங்கள் வந்து எம்ஜியாரை புதியதோர் உச்சத்திற்குக் கொண்டுபோனது என்பது எல்லோரும் அறிந்த வரலாறு. தேவர் எம்ஜியாரை மீண்டும் தூக்கிப் பிடித்தார்;

அதன் பின் மீண்டும் இந்திப் பக்கம் போனார் ரஞ்சன் சுமார் 23 படங்களுக்குப் பின் 1969ல் கேப்டன் ரஞ்சன் என்ற தமிழ் படத்தில் நடித்தார். படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை, இதுவே ரஞ்சன் தமிழில் நடித்த கடைசி திரைப்படமாகும். தொடர்ந்து இந்தி படங்களில் கவனம் செலுத்தினார் ரஞ்சன். பிற்காலத்தில் ஒரு சில மராத்திப் படங்களை இயக்கியும் இருக்கிறார்.

இந்திய இசையையும் மேற்கத்திய இசையையும் ஆராய்ச்சி செய்து தனது மேம்பட்ட இசை நடன ஞானத்தினால் *“Rhythamatics in music and dance”* என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.லிட் பட்டம் பெற்றார் ரஞ்சன். கோட்டு வாத்தியம், வயலின் முதற்கொண்டு 10 இசைக்கருவிகளை வாசிக்கத் தெரிந்தவர். சந்திரலேகா படத்தில் நடிப்பதற்காக ஆறே மாதங்களில் குதிரைச் சவாரி பயின்ற ரஞ்சன், ஒரு நல்ல பந்தயக் குதிரை ஓட்டுநராக பின்னாளில் விளங்கினார். ஸ்பெயின் சென்று வாள்வீச்சு (FENCING) வகைக் கத்திச் சண்டைப் பயிற்சி தேர்ந்தவர்.

1940களில், ரஞ்சன் இசை மற்றும் நடனப் பள்ளியை நிறுவினார், 1950–51ல் நியூயார்க்கின் சர்வதேச கல்வி நிறுவனத்தின் நிதியுதவியுடன் கூடிய சர்வதேச கலைத் திட்டத்தின் கீழ் அவருக்கு ராக்ஃபெல்லர் பெல்லோஷிப் விருதும் வழங்கப்பட்டது. "நாட்டியம்" என்ற பத்திரிகையை ரஞ்சன் நடத்தினார். சிறுகதைகள், கட்டுரைகளையும் எழுதினார். "மாப்பிள்ளை வேட்டை" என்ற நாடகத்தை எழுதினார்.

இந்திய மந்திரவாதிகள் சங்கத்தில் சேர்ந்து மந்திர வேலைகளையும் செய்து பலரின் பாராட்டுகளைப் பெற்றார். ஓவியக் கலையிலும் சிறந்தவர். ரஞ்சன் ஒரு விமான ஓட்டி. மதராஸ் ஃபிளையிங் கிளப்பில் இவர் ஒரு உறுப்பினராக இருந்திருக்கிறார்.

நடிகர் ரஞ்சனின் சகோதரர் வைத்தியநாதன் ஒரு அணு அறிவியல் மாணவர். பின்னர் இங்கிலாந்தில் மேற்கத்திய இசை பயின்றுவிட்டு, சந்திரலேகா படத்துக்கு பின்னணி இசைக் கோர்ப்பு செய்திருந்தார். திரைப்படத்திலிருந்து ஏறக்குறைய ஓய்வு பெற்றபின்னர் சென்னையிலிருந்து 1970களில் பின்னணிப் பாடகர் பி. பி. ஸ்ரீநிவாசுடன் இணைந்து மாமியோ மாமி எனும் இசை, நகைச்சுவை நாடகமொன்றையும் மேடையேற்றினார். இதன் பின்னர் ரஞ்சன் அமெரிக்காவில் நியூஜெர்சி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். கிட்டத்தட்ட 40 படங்களில் நடித்த அவர் தம் 65வது வயதில் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் தேதி நியூ ஜெர்சியில் காலமானார்.

**எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே - உன்னை**
**இடரவைத்து தள்ளப் பார்க்கும் குழியிலே**
**அத்தனையும் தாண்டி காலை முன் வையடா - நீ**
**அஞ்சாமல் கடமையிலே கண் வையடா**

என்ற மருதகாசியின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாய் வாழ்ந்து மறைந்தார் ரஞ்சன்.

**-அன்பன் கார்த்திகேயன்**

**திரை மொழி**

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
துணை ஆசிரியர் : சிவயோகி மவுரியன்
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்
தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766




Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**